## 32.3 சிலைகள் நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (ந.நி.5) துறை

அரசாணை (நிலை) எண் 186 நாள் : 21.9.1998

படிக்க :

அரசு செயலாளர் பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறை நேர்முக கடித எண் 501/ச(ம) ஒ 98–14, நாள் 8.7.98

**ஆணை**

நீதிபதி திரு.எஸ். மோகன் தலைமையிலான உயர்மட்டக்குழு பாதுகாப்பில்லாமல் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ள சிலைகள் சிதைக்கப்படுவது வகுப்பு கலவரங்களுக்கு வழி வகுக்கிறது என சுட்டிக்காட்டி பின் வரும் பரிந்துரைகளை செய்துள்ளது.

(1) அரசாங்கமோ அல்லது தனிப்பட்டவர்களோ எந்த தலைவருக்கும் சிலை நிறுவுதல் கூடாது

(2) ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகள் சரியான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(3) முடிந்தால் ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லலாம்.

2. மேலே குறிப்பிட்ட பரிந்துரைகளை பரிசீலித்த அரசு அவற்றை ஏற்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பின் வரும் அறிவுறைகள் வழங்கி ஆணை வெளியிடுகிறது.

(1) அரசாங்கமோ அல்லது தனிப்பட்ட நிறுவனங்களோ எந்த தலைவருக்கும் சிலை நிறுவுதல் கூடாது,

(2) ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள சிலைகள் சரியான முறையில் பாதுகாக்கப்பட வேண்டும்.

(3) ஏற்கனவே நிறுவப்பட்ட சிலைகள் சீர்குலையாமல் இருக்க அச்சிலைகளை பாதுகாப்பன இடங்களுக்கு கொண்டு சென்று திரும்பவும் நிறுவுவது தேவை என கருதப்பட்டால் இது குறித்து அரசிடம் ஆணை பெற்ற பின் மாற்றி அமைக்கலாம்.

3. மேற்படி ஆணையை அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தெரியப்படுத்துமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகள் இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர்